JUDICIAL FORM NO.53
( See Rule 42)
Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

12.02.2020 **PW**1 **Loganathan** **STC**.1610/2016

<u>குறுக்கு விசாரணை</u>

*என்னுடைய சொந்த ஊர் பெருந்துறை தாலுக்காவில் உள்ள கடப்பமடை ஆகும். நான் என்ன தொழில்செய்துவருகிறேன் என்றால் விவசாயம் செய்துவருகிறேன். எனக்கு 5 ஏக்கர் பூமி உள்ளது. மேற்படி பூமியானது சிப்காட்டின் ஓரத்தில் உள்ளது என்றால் சரிதான். சிப்காட் நிறுவனங்கள் செயல்பட்டு வருவதால் அதை சுற்றி 10 கி.மீ—க்கு தண்ணீர் மாசுபட்டு விவசாயத்திற்கு பயன்படாத நிலையில் உள்ளதென்றால் சரியல்ல. மேற்படி பூமிக்கு ஆற்றுப்பாசனமோ வாய்க்கால் பாசனமோ கிடையாது என்றால் சரிதான். நான் மேற்படி பூமியில் என்ன விவசாயம் செய்துவருகிறேன் என்றால் வாழை மற்றும் தக்காளி பயிரிட்டுள்ளேன். அங்கு எத்தனை நபர்கள் பணியாற்றிவருகிறார்கள் என்றால் தினசரி 6 நபர்கள் வேலை செய்துவருகிறார்கள். ஆள் ஒன்றுக்கு ரூ.500/— வீதம் தினக்கூலி தந்துவருகிறேன் என்றால் சரிதான். விவசாயத்திலிருந்து மாதவருமானம் எனக்கு எவ்வளவு கிடைக்குமென்றால் எனக்கு ஒரு வாரத்திற்கு ரூ.15,000/— வீதம் வருமானம் வரும். மாதம் சுமார் ரூ.60,000/— வரை வருமானம் வருகிறது. எனக்கு வரும் வருமானத்தை நான் என் கைசெலவு போக மீதியை வங்கியில் சேமித்துவைப்பேன் என்றால் சரிதான். எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளதென்றால் ஒரு வங்கியில்தான் உள்ளது. மேற்படி வங்கி கணக்கின் புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனக்கு எவ்வளவு வைப்புத்தொகை உள்ளது என்பதை தெரிந்துகொள்ளலாம் என்றால் சரிதான். இதை தவிர வேறு எதுவும் சொத்து*

உள்ளதா என்றால் இல்லை. பங்குசந்தையில் ஏதேனும் முதலீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விவசாயம் தவிர வேறெந்த தொழிலும் செய்வதில்லை என்றால் சரிதான். நான் 5 ஏக்கரில் விவசாயம் செய்துவருகிறேன் என்று சொல்வது பொய் என்றும் மேற்படி பகுதியில் சிப்காட் நிறுவனம் உள்ளதால் தண்ணீர் மாசடைந்து விவசாயம் செய்யக்கூடிய நிலையில் இல்லையென்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 வருடங்களுக்கு முன்னர் இருந்து தெரியும். எவ்வாறு எதிரி எனக்கு பழக்கம் என்றால் கூரைமகால் என்ற திருமண மண்டபத்திற்கு இலை போடுவது வழக்கம் மேற்படி மண்டபத்தின் அருகில் எதிரி வசித்து வருகிறார். அப்பொழுது பழக்கம் ஏற்பட்டது. மேற்படி எதிரியின் வீடு எங்குள்ளது என்றால் பெருந்துறை – ஈரோடு சாலையில் உள்ள தங்கம் நகரில் உள்ளது. எதிரியின்வீடு எந்த திசை பார்த்து உள்ளதென்றால் வடக்கு பார்த்து உள்ளது. எதிரி எவ்வகை வீட்டில் குடியுள்ளார் என்றால் 2 மாடி கட்டிடத்தில் அதில் மேல்மாடியின் ஒரு பகுதியில் குடியிருக்கிறார். மேற்படி வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டதென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீடு யார் பெயரில் உள்ளதென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியின் கணவரை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர் என்ன வேலை செய்துவந்தாரென்றால் அவர் விவசாய துறையில் உயர் அதிகாரியாக பணியாற்றிவந்தார். கடைசியாக எதிரியின் கணவர் எங்கு பணியாற்றிவந்தார் என்றால் தெரியாது. அவர் தற்பொழுது பணியில் உள்ளாரா என்றால் அதுபற்றி தெரியாது. எதிரியின் வீட்டிற்கு நான் எவ்வளவு நாட்கள் சென்றுள்ளேன் என்றால் சுமார் 20 முறை சென்றுள்ளேன். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் அதுபற்றி தெரியாது. எதிரியின் சொந்த ஊர் எதுவென்றால் சரியாக தெரியாது. எதிரி என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. தற்போது எதிரி என்னவேலை செய்துவருகிறார் என்றால் தெரியாது. எதிரிக்கு என்ன வருமானம் உள்ளதென்றால் தெரியாது. கந்தாம்பாளையத்தை

சேர்ந்த வாசுதேவன் என்பவரும் திண்டல் சாமுண்டி நகரை சேர்ந்த ராஜகோபால் என்பவரும் என்னுடைய நெருங்கிய நண்பர்கள் என்றால் சரியல்ல. எனக்கு அவர்களை தெரியாது. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.5/-கோடி ரூபாயக்கு 50பைசா வட்டியில் கடன் வாங்கி தருவதாக எதிரியின் கணவரிடம் மேற்படி வாசுதேவன் மற்றும் சின்னராஜீ என்கிற ராஜகோபால் கூறினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ரூ.5/-கோடி ரூபாய்க்கு சர்வீஸ் சார்ஜ் ஆக பணம் கொடுக்கவேண்டுமென்று சின்னராஜ் என்கிற ராஜகோபாலும் வாசுதேவனும் கூறினார்கள் என்றால் தெரியாது. அதற்காக எதிரியின் கணவர் மேற்சொன்ன நபர்களிடம் வழக்கு காசோலை மற்றும் மற்ற ஆவணங்களை பாதுகாப்பிற்காக கொடுத்தார் என்றால் தெரியாது. மேற்படி காசோலையை என் மூலம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக எதிரியின் கணவர் 05.02.2016 தேதியில் ஈரோடு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றும் அந்த புகாரில் இந்த வழக்கு காசோலை சம்மந்தமாகவும் கொடுக்கப்பட்டுள்ளதென்றால் எனக்கு தெரியாது. போலீசார் இதுசம்மந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றால் அவ்வாறு விசாரிக்கவில்லை. என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும் தற்பொழுது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாசுதேவன் மற்றும் சின்னராஜ் என்கிற ராஜகோபால் என்பவர்களின் கையாள் என்றும் நான் நீதிமன்றத்திற்கு ஒவ்வொருமுறை வருவதற்கும் ரூ.500/- கொடுக்கிறார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு தகுதி வருமானம் உள்ளதென நிரூபிக்க நீதிமன்றத்தில் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல் எதிரியை பற்றி எந்த ஒரு தகவலையும் என்னால் சொல்லமுடியவில்லை என்றும் உண்மையில் எதிரியை பற்றி தெரிந்திருந்தால் அவர்களுடைய குழந்தைகள் மற்றும் உறவுமுறை பற்றியவிவரத்தை

கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் ஈரோடில் உள்ள நீதிமன்றங்களில் பலவழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. என் மீது தாக்கல் செய்த அல்லது நான் தாக்கல் செய்த காசோலை வழக்குகள் எவ்வளவு நிலுவையில் உள்ளதென்றால் எதுவுமில்லை.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the -----day of --------------2020.

Signature of Interpreter